**செ. கு. எண்**: 160 **நாள்**: 27.04.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 27.4.2012

திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு வட்டம், ரெட்டியார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் திரு. ராமர் 23.4.2012 அன்று ஆற்றுக்குக் குளிக்கச் சென்ற போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்; அருவங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. குள்ளுகுட்டி என்பவரின் மகன் திரு. கண்ணன் 24.4.2012 அன்று ஜம்போடை கிராமத்தில், காவலுக்குப் படுத்திருந்த போது காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், புளியங்கொட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சடையக்கவுண்டர் என்பவரின் மகன் திரு.கோவிந்தன் 24.4.2012 அன்று காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த ராமர், கண்ணன் மற்றும் கோவிந்தன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவங்களில் காலமான ராமர், கண்ணன் மற்றும் கோவிந்தன் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா மூன்று லட்சம் ரூபாய் வனத் துறை மூலம் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**